## பெரம்பலூர் விற்பனைக்குழு செயலாளரின் செயல்முறைகள்
## உத்தரவு பிறப்பிப்பவர் : திரு.ப.சந்திரமோகன்,

செ.மு.ஆ.எண். ஆ/136/2018 நாள் : .02.2025

பொருள்: பணியமைப்பு - நேரடி நியமனம் - வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை - ஒருங்கிணைந்த குடிமைப்பணித் தேர்வு (தொகுதி-IV தேர்வு நாள்: 24.07.2022) - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையத்தின் மூலம் பெரம்பலூர் விற்பனைக்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட இளநிலை உதவியாளர் திருமதி.ரா.முத்துலட்சுமி என்பவருக்கு பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 அவர்களின் கடித எண்.1909/PSD-B1/2023, நாள்: 08.08.2023
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை இதே எண்ணிட்டது நாள்: 19.09.2023
3. திருமதி.ரா.முத்துலட்சுமி, இளநிலை உதவியாளரது பணிசேர் கடித நாள்: 19.09.2023

*********

<u>உத்தரவு:</u>

பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (Group-IV Services) மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் பெற்று பெரம்பலூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ரா.முத்துலட்சுமி அவர்களின் இளநிலை உதவியாளர் பதவியானது **"மேற்படி நியமனம் தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV தொடர்பான நீதிப்பேராணை (WP's Pending) வழக்குகளில் வெளியிடப்படும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது"** என்ற நிபந்தனையுடன் தற்காலிகமாக கீழ்க்காணும் விவரப்படி பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | பெயர், பதவி & அலுவலகம் | பணியில் இணைந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.ரா.முத்துலட்சுமி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>பெரம்பலூர். | 19.09.2023 மு.ப | 19.09.2023 மு.ப |

/த.பி.பா/

மேற்படி பணியாளருக்கு நிபந்தனை அடிப்படையில் தற்காலிகமாக பணி வரன்முறை செய்வதுடன் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் வேளாண் விற்பனைத்துறை பணியாளர்களுக்கான துறைத்தேர்வு மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு ஆகியவற்றில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

செயலாளர் (முகூபொ)
பெரம்பலூர் விற்பனைக்குழு
பெரம்பலூர்

பெறுநர்:
திருமதி.ரா.முத்துலட்சுமி,
இளநிலை உதவியாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
பெரம்பலூர்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது:
முதன்மை செயலாளர் / ஆணையர்,
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை,
சென்னை-32.

நகல்
1. பணிப்பதிவேட்டிற்கு
2. மிகை/உபரி-1